**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ஆம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீவிசுவாவசு வருடம், தைத்திங்கள் 22 ம் நாள்

**இ.ம.எண். 5/2026**

**in**

**அ.வ.எண். 302/2017**

1. சொர்ணாத்தாள்
2. விஜயலட்சுமி
3. புவேஷ்
4. ரங்கசாமி கவுண்டர்
5. குமாரசாமி கவுண்டர் ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

சண்முகம் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 03.02.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.C.ஜெயசங்கர், B.A.,B.L.,M.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.செல்வக்குமார், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் முதல் விசாரணை சாட்சியம் அளிக்க வேண்டி வாய்தா போடப்பட்டுள்ளதில் 2 ம் பிரதிவாதியை வழக்கில் DW3

சாட்சியாக முதல் விசாரணை சாட்சியம் அளிக்க அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 18 விதி 3(A) பிரிவு 151 ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–</u>**

i) அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாவா சொத்துக்களைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தாவாவில் வாதி தரப்பில் வாதியை PW1 சாட்சியாகவும், மற்றொரு சாட்சியை PW2 சாட்சியாக முதல் விசாரணை செய்து மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டு மேற்படி வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் DW1 சாட்சியாக 5 ம் மனுதாரர்/5 ம் பிரதிவாதியை முதல் விசாரணை சாட்சியாக விசாரிக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டுள்ளது.

ii) மனுதாரர்கள் தரப்பில் DW2 சாட்சியாக சண்முகசுந்தரம் என்பவர் மனுதாரர்கள் தரப்பு சாட்சியாக முதல் விசாரணை செய்யப்பட்டு கடந்த 21.01.2026 ம் தேதி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டு 28.01.2026 ம் தேதி மனுதாரர்கள் தரப்பில் முதல் விசாரணை சாட்சியாக வேண்டி (Further Dws) வாய்தா போடப்பட்டுள்ளதில் DW3 சாட்சியாக 2 ம் பிரதிவாதி முதல் விசாரணை சாட்சியம் அளிக்க வேண்டியும், மேற்படி வழக்கில் 2 ம் பிரதிவாதி முக்கியமான சாட்சியாக இருப்பதாலும் மேற்படி வழக்கில் DW3 சாட்சியாக முதல் விசாரணை சாட்சியம் அளிக்க அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

iii) மேலும் மேற்படி வழக்கில் உள்ள பிரச்சனைகள் மற்றும் தடபாத்தியம் சம்பந்தமான பிரச்சனைகள் குறித்து 2ம் பிரதிவாதிக்கு தெரியும் என்பதாலும் முன்னதாக வழக்கில் 2ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் DW2 சாட்சிக்கு முன்னதாக 2ம் மனுதாரரால் மனுதாரர்கள் தரப்பில் முதல் விசாரணை சாட்சியம் அளிக்க இயலாமல் போய்விட்டது. எனவே மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் முதல் விசாரணை சாட்சியம் அளிக்க வேண்டி வாய்தா போடப்பட்டுள்ளதில் 2ம் பிரதிவாதியை வழக்கில் DW3 சாட்சியாக முதல் விசாரணை சாட்சியம் அளிக்க அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**<u>2) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:—</u>**

i) மனுதாரர் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இவ்வெதிருரையில் இவ்வெதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபணம் வேண்டியது.

ii) மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் பல வாய்தாக்கள் பெற்ற பின்னரே 5ம் பிரதிவாதி DW1 சாட்சியாக விசாரிக்கப்பட்டார். பின்னிட்டு 3ம் நபர் ஒருவரை மனுதாரர்கள் தரப்பில் DW2 சாட்சியாக விசாரித்து முடிக்கப்பட்ட பின்னர் 2ம் பிரதிவாதியை மனுதாரர்கள் தரப்பு DW3 சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரும் 2ம் பிரதிவாதி மேற்படி வழக்கில் தனிப்பட்ட எதிர்வாதம் எதுவும்

செய்யவில்லை. 5ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டுள்ளார்.

iii) 5ம் பிரதிவாதியே ஆவணங்கள் தாக்கல் செய்து DW1 சாட்சியாக விசாரிக்கப்பட்ட நிலையில் தற்போது 2ம் மனுதாரர் தன்னை முதலாவது சாட்சியாக விசாரிக்காததற்கும் தற்போது சாட்சியாக விசாரிக்க வேண்டியதற்கும் குறிப்பிட்ட காரணம் எதுவும் மனுவில் குறிப்பிட்டு கூறவில்லை. மேலும் மனுதாரர்கள் தற்போது தனது தரப்பில் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டும் என்ற விபரங்களும் குறிப்பிடவில்லை. மேலும் மனுதாரர் இம்மனுவில் கோரும் பரிகாரமானது காலம் கடந்து மனுதாரரின் DW1 மற்றும் DW2 சாட்சிகளின் குறுக்கு விசாரணையில் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள சாதகங்களையும் இடைவெளிகளையும் அடைக்கும் நோக்கில் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே 2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**<u>5. தீர்வு:–</u>**

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுதாரர்கள் தரப்பில் முதல் விசாரணை சாட்சியாக வேண்டி (Further Dws) வாய்தா போடப்பட்டுள்ளதில் DW3

சாட்சியாக 2ம் பிரதிவாதி முதல் விசாரணை சாட்சியம் அளிக்க வேண்டி இருப்பதாலும் மேற்படி வழக்கில் உள்ள பிரச்சனைகள் மற்றும் தடபாத்தியம் சம்பந்தமான பிரச்சனைகள் குறித்து 2ம் பிரதிவாதிக்கு தெரியும் என்பதாலும் முன்னதாக வழக்கில் 2ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் DW2 சாட்சிக்கு முன்னதாக 2ம் மனுதாரரால் மனுதாரர்கள் தரப்பில் முதல் விசாரணை சாட்சியம் அளிக்க இயலாமல் போய்விட்டது என்றும் எனவே மேற்படி வழக்கில் 2ம் பிரதிவாதி DW3 சாட்சியாக முதல் விசாரணை சாட்சியம் அளிக்க அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டு, எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் 5ம் பிரதிவாதியே ஆவணங்கள் தாக்கல் செய்து DW1 சாட்சியாக விசாரிக்கப்பட்ட நிலையில் தற்போது 2ம் மனுதாரர் தன்னை முதலாவது சாட்சியாக விசாரிக்காததற்கும் தற்போது சாட்சியாக விசாரிக்க வேண்டியதற்கும் குறிப்பிட்ட காரணம் எதுவும் மனுவில் குறிப்பிட்டு கூறவில்லை என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 15.03.2018 அன்று 5ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகளால் மேற்படி எதிர்வழக்குரை ஏற்றுக்கொள்ளப்பட்டு, கடந்த 12.09.2025 அன்று அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு, கடந்த 13.10.2025 அன்று வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 மற்றும் நீ.ம.சா.ஆ.1, 2 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 27.10.2025 அன்று

வா.சா.1ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு, கடந்த 01.11.2025 அன்று வா.சா.2 விசாரிக்கப்பட்டு, கடந்த 05.11.2025 அன்று வா.சா.2ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு, கடந்த 01.12.2025 அன்று பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டு பி.வா.சா.1 முதல் பி.வா.சா.ஆ.20 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 12.01.2026 அன்று பி.வா.சா.2 விசாரிக்கப்பட்டு, கடந்த 21.01.2026 அன்று பி.வா.சா.2ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு, அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு சாட்சிக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் கடந்த 28.01.2026 அன்று வழக்கில் 2ம் பிரதிவாதியை DW3 சாட்சியாக முதல் விசாரணை சாட்சியம் அளிக்கக அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது இவ்வழக்கில் பி.வா.சா.1 ஆக 5ம் பிரதிவாதி விசாரிக்கப்பட்டதற்கு பின்னிட்டு பி.வா.சா.2 ஆக மூன்றாம் நபரான ஒரு சண்முக சுந்தரம் என்பவர் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாக விசாரிக்கப்பட்டதற்கு பின்னிட்டு இம்மனுவானது 2ம் பிரதிவாதியை பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.3 ஆக விசாரிக்க அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 2ம் பிரதிவாதி இந்த வழக்கிற்கு அவசியமான சாட்சி என்றும் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் பி.வா.சா.2க்கு முன் மேற்படியாரை விசாரிக்க முடியாமல் போய்விட்டது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

8. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் இம்மனுவில் கோரும் பரிகாரமானது காலம் கடந்து மனுதாரரின் DW1 மற்றும் DW2 சாட்சிகளின் குறுக்கு விசாரணையில் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள சாதகங்களையும் இடைவெளிகளையும் அடைக்கும் நோக்கில் மனுதாரர்களால் தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றும் சொல்லப்பட்டிருந்தாலும் அசல் வழக்கானது தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக எதிர்மனுதாரர்/வாதியால் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தங்களது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்குவது நீதியின் பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும் மனுதாரர்கள் இம்மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்கும்படியாக உள்ளதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்பட போவதில்லை என்பதாலும், தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனையை இறுதியாக தீர்க்கும் பொருட்டும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதினாலும் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் 2ம் பிரதிவாதி DW3 சாட்சியாக முதல் விசாரணை சாட்சியம் அளிக்க அனுமதிகோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் எதிர்மனுதார்/வாதிக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியம் மற்றும் கால விரயத்தை கருத்திற்கொண்டு இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கூட்டாகவும், தனித்தனியாகவும், எதிர்மனுதாரர்/வாதிக்கு ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) செலவு தொகையாக வரும் 10.02.2026ம் தேதிக்குள் நேரடியாக வழங்கவேண்டும். தவறும் பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

2. இரு தரப்பினரும் அசல் வழக்கை காலதாமதப்படுத்தாமல் விரைந்து முடிக்க ஒத்துழைக்கவேண்டும். மீண்டும் அழைக்க 10.02.2026.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.02.05 19:08:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :– இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :– இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.02.05 19:08:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.